# வெறிநாய்க்கடி நோய் இல்லாமல் பாதுகாக்கப்படும் உபின் தீவு

**1953 முதல், வெறிநாய்க்கடி நோய் இல்லாத நகரமாக சிங்கப்பூர் விளங்குகிறது. இருப்பினும், வெறிநாய்க்கடி நோயின் தாக்குதலிலிருந்து சிங்கப்பூரைத் தொடர்ந்து பாதுகாக்கவேண்டியது அவசியம் என்பதோடு, பொறுப்பான செல்லப்பிராணி வளர்ப்பையும், பொறுப்புணர்வையும் ஊக்குவிப்பதும், விலங்கு நலனை மேம்படுத்துவதும் அவசியமாகிறது.**

டிசம்பர் 2018 முதல், தேசியப் பூங்காக் கழகத்தின் ஒரு பிரிவாக இயங்கும் விலங்குநல மருத்துவச் சேவை, உபின் தீவில் வேக்ஸ் லிசா நடவடிக்கையை மேற்கொண்டது. இது முன்னர் சிங்கப்பூரின் வேளாண், உணவு, கால்நடை மருத்துவ ஆணையம் என அழைக்கப்பட்டது. வேக்ஸ் லிசா நடவடிக்கை என்பது வெறிநாய்க்கடி நோய் பரவாமலிருக்க நாய்களுக்குத் தடுப்பூசி போடுவதற்கான ஒரு நடவடிக்கையாகும். அதோடு, உபின் தீவில் வாழும் நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய்க்கு எதிரான ஊக்கத் தடுப்பூசி போடுதல், இரத்த மாதிரிகளைச் சேகரித்தல், நுண்சில்லு பொருத்துதல், கருத்தடை செய்தல் ஆகியனவும் திட்டத்தில் உள்ளடங்கும். இந்த முனைப்பில், தனியார் கால்நடை மருத்துவர்களோடும், சிங்கப்பூரிலுள்ள ஆதரவற்ற, கைவிடப்பட்ட நாய்களை மீட்டு மறுவாழ்வும் மறுவாழ்விடமும் அளிக்கும் தெரு நாய்களைக் காப்பாற்றுங்கள் (Save Our Street Dogs - SOSD) அமைப்போடும் விலங்குநல மருத்துவச் சேவை கூட்டிணைந்து செயல்படுகிறது.

2019 நவம்பர் மாதமும் 2021 ஜூலை மாதமும் இரண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உபின் தீவில் உள்ள சுமார் 40 நாய்களில், 27 நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மீதமுள்ள நாய்களுக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் தடுப்பூசி போட்டு முடிக்க முடியும் என நம்புகிறோம். உபின் தீவில் உள்ள நாய்கள் வெறிநாய்க்கடி நோயிலிருந்து பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காக வேக்ஸ் லிசா நடவடிக்கை ஆண்டுதோறும் தொடரும்.



2019 நவம்பர் மாதம் நடத்தப்பட்ட வேக்ஸ் லிசா நடவடிக்கையில் ஈடுபட்ட SOSD தன்னார்வலர்கள் (கொவிட்-19 கிருமிப்பரவலுக்கு முன்னர் எடுக்கப்பட்ட புகைப்படம்)



2019-ஆம் ஆண்டில் நாய் உரிமத்திற்கு விண்ணப்பிக்க கிராமவாசிக்கு உதவுகின்ற தேசியப் பூங்காக் கழக ஊழியர்கள் (கொவிட்-19 கிருமிப்பரவலுக்கு முன்னர் எடுக்கப்பட்ட புகைப்படம்)



2021 ஜூலை மாதம் நடத்தப்பட்ட வேக்ஸ் லிசா நடவடிக்கை





Ubin Tides

乌敏岛
ISSUE 7
May 2021 - Oct 2021
PULAU UBIN

# மீண்டும் திறக்கப்படும் சின் நாம் ஹுவாட்

சின் நாம் ஹுவாட், அல்லது 40/40-ஏ எண் வீடு, உபின் தீவில் உள்ள ஒரு பிரபலமான காப்பிக் கடையும், சீன உணவகமும் ஆகும். திருவாட்டி கோ சின் எங், திருவாட்டி கோ குவாட் லாய் ஆகிய இரு சகோதரிகள் இதை நடத்துகின்றனர். சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு, அவர்களின் பெற்றோரால் தொடங்கப்பட்ட இந்தக் கடையில் கறி சாதம், கேக், காயா பன் உள்ளிட்ட பல்வேறு வகையான உணவுகள் விற்பனை செய்யப்பட்டன. 1990-களின் பிற்பகுதியில், தங்கள் சகோதரர் காலமான பிறகு, இரு சகோதரிகளும் இந்தக் குடும்ப வியாபாரத்தை எடுத்து நடத்தத் தொடங்கினர்.

2019-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, சகோதரிகள் மற்றும் அவர்களின் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, பெரிய அளவிலான பழுதுபார்ப்புகள் செய்யப்படவேண்டும் எனக் கண்டறியப்பட்டது. தாங்கும் தூண்கள் மற்றும் உத்திரங்கள், கூரை, செயற்கை உட்கூரை, தரை, சுவர் உறைப்பூச்சுகள் ஆகியவற்றை மாற்றுவது, வடிகால்களைச் சீரமைப்பது ஆகியவை பழுதுபார்ப்புப் பணிகளில் அடங்கின. சகோதரிகளால் சமாளிக்க முடியாத அளவுக்குப் பழுதுபார்ப்புப் பணிகள் பெருமளவிலும் அதிக விலையாகவும் இருந்ததால், அவர்கள் தேசியப் பூங்காக் கழகத்தின் உதவியை நாடினர்.

தாங்கள் உரிமம் பெற்ற வளாகத்தைப் பராமரிக்க வேண்டியது குத்தகைதாரர்களின் பொறுப்பு என்றாலும், ஒரு நல்லெண்ண அடிப்படையில் அவசியமாகத் தேவைப்படும் பழுதுபார்ப்புகளை மேற்கொள்ள தேசியப் பூங்காக் கழகம் ஒப்புக்கொண்டது. 2019 டிசம்பரில் பணிகள் தொடங்கப்பட்டன. கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட சில தாமதங்களுக்குப் பிறகு, சின் நாம் ஹுவாட்டின் பழுதுபார்ப்புப் பணிகள் முடிவடைந்து, 2021 ஆகஸ்ட் மாதத்தில் சகோதரிகளிடம் கடை ஒப்படைக்கப்பட்டது.

சின் நாம் ஹுவாட் மீண்டும் திறக்கப்படுவதால், வருகையாளர்களும் உள்ளூர்ச் சமூகத்தினரும் கோ சகோதரிகளின் சுவையான உணவையும் கையால் தயாரிக்கப்பட்ட காப்பியையும் மீண்டும் சுவைக்க முடியும்.

40-ஆம் எண் வீட்டின் சமையலறை — பழுதுபார்ப்புப் பணிகளுக்கு முன்பும் (இடது), ஆகஸ்ட் 2021-ல் பணிகள் முடிவடைந்த பிறகும் (வலது)









40-ஆம் எண் வீட்டின் உட்பக்கச் சுவர் — பழுதுபார்ப்புப் பணிகளுக்கு முன்பும் (இடது), ஆகஸ்ட் 2021-ல் பணிகள் முடிவடைந்த பிறகும் (வலது)




மீண்டும் திறக்கப்பட்ட 40-ஆம் எண் வீட்டில் திருவாட்டி கோ சின் எங் (வலது) மற்றும் அவரது தங்கை திருவாட்டி கோ குவாட் லாய் (இடது)

> "வீட்டைப் பழுதுபார்க்க உதவியதற்கு நானும் என் சகோதரியும் தேசியப் பூங்காக் கழகத்துக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். அந்த உதவி இல்லையெனில், பழுதுபார்ப்புகளைச் சொந்தமாக மேற்கொள்வதற்கான செலவுகளை எங்களால் சமாளித்திருக்க முடியாது."
>
> **திருவாட்டி கோ சின் எங்**

NATIONAL PARKS
LET'S MAKE SINGAPORE OUR CITY IN NATURE
FRIENDS OF UBIN NETWORK

# பெஸ்டா உபின் மற்றும் உபின் தினம் 2020




தலைப்பு: கவான் உபின் ஏற்பாடு செய்த உபின் தீவு மெய்நிகர் மரபுடைமைச் சுற்றுலா

2020-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொவிட்-19 கிருமிப்பரவல் சிங்கப்பூரைத் தாக்கியபோது, பெஸ்டா உபின் மற்றும் உபின் தினத்தின் ஏற்பாட்டாளர்கள், நடைமுறையில் இருந்த பாதுகாப்பு நிர்வாக நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு நடவடிக்கைகளை நடத்தும் விதத்தில் மாற்றங்களைச் செயல்படுத்த வேண்டியிருந்தது. ஒன்றுகூடுபவர்களின் எண்ணிக்கைக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் காரணமாக, நேரடி நிகழ்ச்சிகளைக் குறைவாகவே நடத்தமுடியும் என்பதால், அதற்குப் பதிலாக அதிகமான மெய்நிகர் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதன்வழி, பெஸ்டா உபின் மற்றும் உபின் தினத்தை 2020 செப்டம்பர் மாதத்தில் சமூகம் தொடர்ந்து அனுசரிக்க முடிந்தது.

2020 செப்டம்பர் 12 முதல் 26 வரை, உபின் தீவின் வளமான பல்லுயிரினங்களையும் கலாசாரப் பாரம்பரியத்தையும் வெளிப்படுத்த, தன்னார்வலர்களும் பங்குள்ளவர்களும் தொடர்ச்சியாக இணையம்வழி உரைகளுக்கும் மெய்நிகர் நடவடிக்கைகளுக்கும் ஏற்பாடு செய்தனர். கம்போங் சூராவ் வம்சாவளியினர் ஒருவர் நடத்திய மலாய் கம்போங் சுற்றுலா, சிங்கப்பூர் இயற்கைச் சங்கத்தின் பறவைக் குழு நடத்திய பறவைப் பாதுகாப்பு குறித்த உரை, கவான் உபின் மற்றும் சிங்கப்பூர் மரபுடைமைச் சங்கத்தின் மரபுடைமைச் சுற்றுலா, உள்ளூர்க் கலைஞரும் வனவிலங்கு காப்பாளருமான அல்பனா அஹூஜா ஏற்பாடு செய்த கலைப் பட்டறை, சிங்கப்பூர் வெளிப்புற நடவடிக்கை அமைப்புடன் தீவின் அதிகம் அறியப்படாத பகுதிகளை ஆராயும் துணிகர மரபுடைமைப் பயணம் ஆகியவை இதில் உள்ளடங்கும். தேசியப் பூங்காக் கழகமும் யூடியூப்பில் நான்கு மெய்நிகர் சுற்றுலாக்களை வெளியிட்டதோடு, அனைவரும் உபினை எண்ணி மகிழ்வதற்கும் கொண்டாடுவதற்கும் ஒரு நாள் முழுவதுமான உரைகளுக்கும் ஏற்பாடு செய்தது.

செப்டம்பர் 26, 2020 அன்று நடைபெற்ற 9-வது உபின் தினம், பெஸ்டா உபின் 2020-ன் உச்சக்கட்டத்தைக் குறித்தது. துணைப் பிரதமரும் பொருளாதாரக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சருமான திரு ஹெங் சுவீ கியாட், தேசிய வளர்ச்சி அமைச்சர் திரு டெஸ்மண்ட் லீ, பிரதமர் அலுவலக அமைச்சரும் கல்வி மற்றும் வெளியுறவுக்கான இரண்டாம் அமைச்சருமான டாக்டர் முஹம்மட் மாலிகி பின் ஒஸ்மான் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

உபின் தோழமைக் கூட்டமைப்பின் (FUN) உறுப்பினர்கள் உபின் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பல்வேறு முனைப்புகளின் முன்னேற்றம் குறித்து வருகையாளர்களுக்கு விளக்கினர். விரிவான உபின் பல்லுயிர் ஆய்வின் மூலமாகப் புதிய விலங்கினங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதையும், உபின் தீவில் காடு மீட்புத் திட்டங்களை அடுத்த 10 ஆண்டுகளுக்கு தேசியப் பூங்காக் கழகமும் சமூகமும் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அமைச்சர் டெஸ்மண்ட் லீ அறிவித்தார்.



(இடமிருந்து) அமைச்சர் முஹம்மட் மாலிகி பின் ஒஸ்மான், துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியாட், அமைச்சர் டெஸ்மண்ட் லீ (வலது) ஆகியோர் 2020-ஆம் ஆண்டு உபின் தினத்தன்று உபின் வாழ்வியல் ஆய்வகத்தில் ஒரு மரத்தை நட்டனர்.




ஆண்டி-மோட்டார் டார்ப்பீடோ போட் கன் பேட்டரி பற்றிய மெய்நிகர்ச் சுற்றுலாவின் புகைப்படம்

தீவின் பழமையான இயற்கை அழகை ஆராய்வதற்காக நான்கு நேரடி நடவடிக்கைகளும் இடம்பெற்றன. அவை, சிக்காடா ட்ரீ ஈகோ-பிளேஸ், சிங்கப்பூர் டியோச்சியூ குழு, சிங்கப்பூர் இயற்கைப் புகைப்படச் சங்கம், யூ கோர்ஸ் ஆகியவற்றின் தன்னார்வலர்களால் தனித்தனியாக நடத்தப்பட்டன. சிலர் காடு மீட்பு முயற்சிக்கும் ஒரு மில்லியன் மரங்கள் இயக்கத்திற்கும் ஆதரவாக மரங்களை நடும் வாய்ப்பையும் பெற்றனர். அனைத்து நடவடிக்கைகளும் சிறிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டு, நடைமுறையில் இருந்த பாதுகாப்பு நிர்வாக நடவடிக்கைகளைப் பின்பற்றி நடத்தப்பட்டன.



ஜாலான் ஜெலுடோங்கில் மரம் நடுவதில் பங்கெடுக்கும் குடும்பம்



பாதுகாப்பு நிர்வாக நடவடிக்கைகளைப் பின்பற்றி, சிக்காடா ட்ரீ ஈகோ-பிளேஸ் ஏற்பாடு செய்த கதை சொல்லும் நடவடிக்கை




26 செப்டம்பர் 2020 அன்று அனுசரிக்கப்பட்ட உபின் தின இணையக் கருத்தரங்கின் காட்சிகள்

